பினர்கள் தெரிந்துகொண்டிருக்கக்கூடும். மாவட்டங்களுக்குப் பெயர் வைக்கிறபோதே, இருக்கும் பெயர்களை அப்படியே மாற்றாமல்தான் செய்திருக்கிறோம். ஆகையால், நாமக்கல் தாலுகா பிரிக்கப்படுகிறபோது, நாமக்கல் என்ற பெயர் இருக்கும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மழையினால் உடைப்பு.

* 5. வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1982 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், கன்னியாகுமரி மாவட்டம், கீழ்க்குளம் ஏலாவின் இருபுறமும் பாய்கிற வாய்க்காலில் மீண்டும் உடைப்பு ஏற்பட்டதால், சுமார் இருநூறு ஏக்கரில் பயிரிடப்பட்ட பயிர் சேதமடைந்தது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

(உ) இதே இடத்தில் முதலில் எப்போது உடைப்பு ஏற்பட்டது? அது எப்போது அடைக்கப்பட்டது?

(எ) 1982 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த மழையின் அளவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) மணல் மூட்டைகளால் உடைப்பு சரி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியை வரும் காலங்களில் வருவாய்த் துறையிடமிருந்து பொதுப் பணித் துறையிடம் ஒப்படைத்து பராமரிப்பு வேலைகளை கவனிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(உ) 1978-ல் ஏற்பட்ட உடைப்பை 1981-82 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் சுமார் ரூ. 2.52 இலட்சத்தில் சரி செய்யப்பட்டது.

(எ) 1982ஆம் ஆண்டு அக்டோபர் 98.40 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவரவர்களே, 1978-ல் இதே பகுதியில் உடைப்பு ஏற்பட்டது. அதை 1981-82-ல் 2.60 இலட்சம் ரூபாய் செலவு செய்து அந்த உடைப்பு அடைக்கப்பட்டது. 1982-ல் 98 மி.மீ. மழை பெய்து மீண்டும் உடைப்பு ஏற்பட்டது. முதலில் ஏற்பட்ட உடைப்பு எப்படி அடைக்கப்பட்டதோ, அப்படி அடைக்கப்பட்டும், இந்த மாதிரி மீண்டும் என் உடைப்பு

ஏற்பட்டது என்பதை அரசு உணர்கிறதா? முதலில் எப்படி அடைத்தார்கள், என்ன தவறு ஏற்பட்டது என்று அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டில் சரி செய்வதற்காக தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் மூலம் வேலை தொடங்கப்பட்டது. 1981-82-ல் 2.52 இலட்சம் ரூபாய் செலவு செய்யப் பட்டிருக்கிறது. மீண்டும் அந்தப் பகுதியிலே உடைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. ஏற்கெனவே இந்தப் பகுதி வருவாய்த் துறையிலிருந்து, பொதுப் பணித் துறைக்கு மாற்றப்பட்டு, அதன்மூலமாக தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் வேலைகளைச் செய்ய வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். எப்போது மழை அதிகமாகப் பெய்தாலும், உடைப்பு ஏற்படுகிற காரணத்தால், நிரந்தரமாக ஒரு பணியைச் செய்து முடிக்க வேண்டுமென்ற கருத்தும் அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் தாலுகாவில் உள்ள இந்தக் குளத்தில் உடைப்பை அடைப்பதற்காக 1981-82-ல் 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். 1978-ல் பெய்த மழையில் கால் பங்கு மழையிலேயே மீண்டும் **உடைப்பு** ஏற்பட்டுவிட்டது. என்னுடைய குறை எல்லாம், பணம்தான் செலவு செய்திருக்கிறார்களே தவிர, உடைப்பை அடைக்கவில்லை என்பதுதான். அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யுமா? அடுத்ததாக, அதனால் பாதிக்கப்பட்ட 200 ஏக்கரா நிலங்களில் பயிரிட்ட விவசாயிகளுக்கு அரசு என்ன உதவி செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நாம் பணம் செலவு செய்திருக்கிறோம். ஆனால் சரியான முறையில் நடைபெற்றதா? வேலைகள் குவாலிடி-வைஸ் (Quality-wise) என்று சொல்லக் கூடிய அளவுக்கு இருந்ததா என்பதைப்பற்றிக் குறிப்புகள் என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விகளை அடிப்படையாக வைத்துப் பதில்களைப் பெறுவேன். அதே நேரத்தில் வருகிற காலகட்டத்தில் இதை நிரந்தரப் பணியாகவே செய்து முடிக்க வேண்டும் என்பது அரசின் பரிசீலனையிலிருக்கிறது. இனி இதுமாதிரி வராமலிருக்கக் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

1984 பிப்ரவரி 17]

திரு. சி. ஆர். கோலப்பா : தலைவரவர்களே, சென்னை நகரில் சைதாப் பேட்டையில் பல சலவைத் தொழிலாளர்கள். . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மூலக் கேள்வி கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள குளத்தைப்பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் ஒவ்வொரு குளமாகக் குறிப்பிட்டால் எப்படி?

திரு. சி. ஆர். கோலப்பா : தலைவரவர்களே, நினைவுபடுத்துவதற்காகக் கேட்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சரி, கேளுங்கள்.

திரு. சி. ஆர். கோலப்பா : தலைவரவர்களே, சைதாப்பேட்டையில் (சென்னையில்) ஏறக்குறைய பத்தாயிரம் சலவைத் தொழிலாளர்கள் ஆற்றோரத்தில் வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். மழைக்காலங்களில் அவர்கள் வீடுகளில் வெள்ளம் புகுந்து மிகவும் அவஸ்தைப்பட்டு வருகிறார்கள். இந்த இடங்களில் சுவரெழுப்பிட, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே மாநகராட்சி ஆணையரிடத்தில் ஏற்கெனவே கூறி இதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கூறியிருக்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Bala Sevikas

* 6 *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the number of Bala Sevikas serving as on 1st February 1983, at the Schools under the control of the Dindigul Municipality; and

(*b*) the number of Bala Sevikas, whose services were regularised as on 1st February 1983?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 24.

(இ) ஒருவரும் இல்லை.